<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை 600 006</u>

<u>ஜுன்/ஜுலை 2013, மேல்நிலை சிறப்புத் துணைத் தேர்வு முடிவுகள் வெளியிடுதல்</u>

<u>செய்திக் குறிப்பு</u>

ஜுன் 19 –ஆம் தேதி முதல் ஜுலை 01–ஆம் தேதிவரை நடைபெற்ற ஜுன்/ஜுலை 2013, மேல்நிலை சிறப்புத் துணைத் தேர்வினை எழுதிய தனித்தேர்வர்களின் தேர்வு முடிவுகள் **25.07.2013 (வியாழக்கிழமை)** அன்று நண்பகல் 12 மணிக்கு வெளியிடப்படுகிறது. தனித்தேர்வர்கள் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதி, மாதம், வருடத்தினைப் பதிவு செய்து தேர்வு முடிவுகளை மதிப்பெண்களுடன் **www.dge.tn.nic.in என்ற** இணையதளம் மூலம் அறிந்துகொள்ளலாம்.

**செய்முறை அடங்கிய பாடத்தினை தேர்வு எழுதிய சில தனித்தேர்வர்கள் செய்முறை மதிப்பெண் குறித்த ஆவணத்தினை ஆன்–லைன் விண்ணப்பத்துடன் இணைத்து சமா்ப்பிக்காததால், அவர்களது தேர்வு முடிவுகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. மேலும், சில தனித்தேர்வர்களின் மார்ச் 2013 பருவத் தேர்வெழுதிய பதிவெண் இவ்வலுவலக ஆவணத்துடன் tally ஆகாததால், அவர்களுடைய தேர்வு முடிவுகளும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இத்தகைய தனித்தேர்வர்கள் உடனடியாக அவர்கள் வருவாய் மாவட்டத்திற்கான அரசுத் தேர்வுகள் மண்டலத் துணை இயக்குநர் அலுவலகத்தில், மார்ச் 2013, மேல்நிலைத்தேர்வெழுதிப் பெற்ற மதிப்பெண் சான்றிதழினை ஒப்படைக்கவேண்டும். அதன்பின்னரே அவர்களது தேர்வு முடிவுகள் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

<u>மதிப்பெண் சான்றிதழ்கள் விநியோகிக்கப்படும் தேதி</u>

தனித்தேர்வர்கள் அவர்கள் தேர்வெழுதிய மையங்களில் **30.07.2013 (செவ்வாய்கிழமை)** அன்று மதிப்பெண் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளலாம்.

சிறப்பு அனுமதித் திட்டத்தின்கீழ்(தட்கல்) விண்ணப்பித்து தேர்வெழுதிய தனித்தேர்வர்களுக்கு மதிப்பெண் சான்றிதழ்கள் அவர்களது வீட்டு முகவரிக்கு அஞ்சலில் அனுப்பப்படும்.

**விடைத்தாளின் நகல் (Copy of the valued answer script) மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிப்பதற்கான தேதிகள் விரைவில் வெளியிடப்படும்.**

தண்.வசுந்தராதேவி
**இயக்குநர்**

இடம் – சென்னை–6
நாள் – 22.07.2013

---

ஒம்/–
இயக்குநருக்காக

அனுப்புநர்

தண்.வசுந்தராதேவி,
எம்.ஏ.,எம்.பில். எம்.எட்.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அரசு முதன்மைச் செயலாளர்,
பள்ளிக்கல்வித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 9.

ந.க.எண். 017981/எச்.1/2013 நாள். 22.07.2013

பொருள் : மேல்நிலை சிறப்பு துணைப் பொதுத்தேர்வு ஜுன்/ஜுலை 2013 – தனித்தேர்வர்களின் தேர்வு முடிவுகள் வெளியிடுதல் – வெளியிடப்படவுள்ள செய்திக்குறிப்பு பணிந்தனுப்புதல் – தொடர்பாக.

-----

நடைபெற்ற ஜுன்/ஜுலை 2013 மேல்நிலை, சிறப்பு துணைப்பொதுத்தேர்வு எழுதிய தனித்தேர்வர்களின் தேர்வு முடிவுகள் 25.07.2013 (வியாழக்கிழமை) அன்று நண்பகல் 12 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

இத்தேர்வினை 244 தேர்வு மையங்களில் 83,510 எண்ணிக்கையிலான தனித்தேர்வர்கள் தேர்வு எழுதியுள்ளனர் என்ற விவரத்தினை பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு ஜுன்/ஜுலை 2012 மேல்நிலை சிறப்பு துணைத்தேர்வு எழுதிய தனித்தேர்வர்களின் தேர்வு முடிவுகள் 03.08.2012 அன்று வெளியிடப்பட்டது. இவ்வாண்டு முன்கூட்டியே 25.07.2013 அன்று வெளியிடப்படுகிறது என்ற விவரத்தினையும் பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்வு முடிவுகள் வெளியிடுதல் தொடர்பான செய்திக்குறிப்பு அரசுத் தேர்வுத்துறையால் இன்று (24.07.2013) வெளியிடப்படவுள்ளது. செய்திக்குறிப்பு இத்துடன் இணைத்து பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

ஒம்/–

**இயக்குநருக்காக**

இணைப்பு : செய்திக்குறிப்பு